**மாந்தை கிழக்கு பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படுகின்றதுமான 33 காணிகளின் பெறுமதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் கணிப்பீடு செய்யப்படும். | சபைக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களும் உள்ளடக்கி கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தியான ரூபா 3,244,620 பெறுமதியான நிர்மாணத்தின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | இனி வரும் காலங்களில் இத்தவறு வராதபடி நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சீராக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | வேலைகள் பூர்த்தியாக்கப்படாத 02 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 1,499,323 தொகையான மதிப்பீட்டுக் கிரயம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | இவ்வாண்டில் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 5,064,684 பெறுமதியான 02 சூரிய மின் அமைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் அலுவலக உபகரணங்களாக காட்டப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் தளபாடங்களும் பொருத்துக்களும் என்ற தலைப்புக்களின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக வகைப்படுத்தளின் கீழ் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவு IX (ஆ) பந்தி | கட்டண விதிப்பு தொடர்பாக துணைச் சட்டம் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமல் ரூபா 8,880,236 ஆன கழிவகற்றல் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. | அறவிட வேண்டிய கட்டணத்தினை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் உப பிரிவு 16(2) | சபையினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை எதிர்வரும் காலங்களில் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை மற்றும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,227,965 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,319,206 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,000 | 205,923 | 205,923 | - | - | 4,000 | 4,000 | - |
| வாடகை | 580,000 | 1,023,637 | 788,900 | 234,737 | 540,000 | 624,870 | 620,850 | 220,582 |
| உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 275,000 | 340,250 | 340,250 | - | 165,000 | 253,800 | 253,800 | - |
| ஏனைய வருமானம் | 9,846,000 | 15,030,599 | 14,499,122 | 531,477 | 8,479,000 | 13,868,748 | 13,017,926 | 850,822 |
| கூட்டுத்தொகை | 10,704,000 | 16,600,409 | 15,834,195 | 766,214 | 9,184,000 | 14,751,418 | 13,896,576 | 1,071,404 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாடகை மற்றும் குத்தகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 613,557 ஆனது கடந்த 01 தொடக்கம் 11 வருடங்களாக ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன முறையே ரூபா 4,331,317 மற்றும் ரூபா 523,500 ஆகும். | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலுவைப் பணத்தினை துரிதமாக அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 32,200,000 இனை பயன்படுத்தி 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அத்தியாயம் IV இன் 108 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள பொதுப்பயன்பாட்டுச் சேவைகளுக்குரிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும், வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் அபிவிருத்திக்காக நிலையான வைப்பு நிதி உரிய அனுமதி பெற்று பயன்படுத்தப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், பொதுப்பயன்பாட்டுச் சேவைகளுக்குரிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 திசெம்பர் 30 ஆம் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி இற்கு முரணாக சபைக்குரித்தற்ற ஆதனங்களில் ரூபா 53,716,357 செலவில் 05 கட்டிடங்களும் மற்றும் சனசமூக நிலைய புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | காணி ஆவணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணிகளுக்கான உரித்து தொடர்பான முறையான ஆவணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்கள் 06 தொடக்கம் 14 வருடங்களுக்கு மேலாக சபையினுடைய பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் உரிமை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்களின் உரிமைத்துவம் தீர்க்கப்படல் வேண்டும். |
| (இ) | சேதனப்பசளை உற்பத்திக்காக ரூபா 1,147,800 பெறுமதியான மல்டி சொப்பர் இயந்திரம் 2023 ஆம் ஆண்டு சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அறிக்கையிடும் திகதிவரை அவ் இயந்திரத்தினை சேதனப்பசளை உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எமது சபையில் கழிவப் பொருட்கள் மிக குறைந்தளவில் காணப்படுவதால் சேதன ப்பசளை உற்பத்தி இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை. | சொத்துக்களை பூரணமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு தேவைப்பாடுகள் இனங்கண்டு உபகரங்கள் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். |

**4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதிட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 24 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையிலும் 05 செலவின விடயங்களில் 29 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையும் விலகல்களும் ஒரு மூலதனச் செலவின விடயத்தில் 279 சதவீதமான விலகலும் இருந்ததாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் பாதிட்டுக்கமைய முகாமைத்துவக்கட்டுப்பாட்டுடன் நடைமுறைப்படத்தப்படும் | தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு கவனத்துடன் பாதீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |